# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 51 — 1973 මාර්තු 16 වැනි සිකුරාදා — 1973.03.16

51 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு மாச்சு மாதம் 16 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது).


## பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 263 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 275 |


## பதவிகள்—வெற்றிடம்

***"ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"***

*1. படிகள்.—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பதும் அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.*

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள். கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்குவிதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கப் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.*

*3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச்சம்பளத்தில் இல்லாதவர்களையொழித்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுவார்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.*

*(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்த வேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.*

*(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.*

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு, நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.*

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுங்குவோர் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.*

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள் அவர்கள் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

### முக்கிய அறிவித்தல்

*ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.*

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், நியமைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணபத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.

---

## அறிவித்தல்

### அம்பாறை மாவட்டத்தில் கரைவாகு நிந்தவூர் பற்றுப் பிரிவுக்கு மருதமுனைப் பகுதிக்கு முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி

கரைவாகு நிந்தவூர்ப்பற்றுப் பிரிவு/முஸ்லீம் விவாகப் பதிவாளர் பதவிக்கு மருதமுனைப் பகுதிக்குள் நிரந்தரமாகக் குடியிருக்கும் விவாகமான ஆண் முஸ்லீம்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றன.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும் குறிப்பிட்ட பகுதியை உள்ளடக்கும் காரியாதிகாரியின் அலுவலகத்திலும், கிராமசேவையாளர் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிசு நிலையம், சனசமூக நிலையங்களிலும், ஏனைய பகிரங்க நிலையங்களிலும் காரியாலயங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்பப்படுவதோடு 1973 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 20 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

சோமசிறி முனசிங்க,
மேலதிக மாவட்ட பதிவாளர்,
மாவட்ட பதிவாளருக்காக.

மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
அம்பாறை,
73.02.27.

3-509—16.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 51

---

## ஸ்ரீ லங்கா கடற்படையில் பயிலுநர் பயிற்சிகள்

ஸ்ரீ லங்கா கடற்படையின் நிலையான கடற்படைப் பகுதியில் பயிலுநர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் பயிலுநராக நியமனம் பெறுவதுடன், விதிக்கப்பட்ட காலப்பயிற்சியை திருப்திகரமாக நிறைவேற்றினால் ஆணையும் வழங்கப்பெறுவர்.

3. தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் ஸ்ரீலங்காவில்/வெளிநாட்டில் பயிற்சிபெறப் பணிக்கப்படுவர்.

4. தகைமைகள்.—விண்ணப்பதாரர் பின்வருவனவற்றைக் கட்டாயம் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) ஸ்ரீ லங்காப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) 1973 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி 18 வயதிற்குக் குறையாமலும் 21 வயதுக்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) (i) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் உட்பட ஒரே தடவையில் ஆறு பாடங்களுடன் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்திபெற்றிருப்பதுடன் இரண்டு முறைக்கு மேற்படாத தடவைகளில் குறைந்தது நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளும் பெற்றிருத்தல் வேண்டும் :—

உயிரியல்
தூயகணிதம்
பிரயோககணிதம்
பௌதிகவியல்
இரசாயனவியல்

அல்லது

(ii) ஏதாவது விஞ்ஞான உயர்தரத் தகைமை.

குறிப்பு.—விளையாட்டுக்களங்களில் மிகத்தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ஈ) வைத்திய நியமனம்.—விண்ணப்பதாரர் நியமனத்துக்கு முன்னர் கடற்படை ஒழுங்கின் கீழ் நடாத்தப்படும் வைத்தியப் பரீட்சையில் சித்தி பெறுவதுடன் பின் வரும் உடல் அளவுகளையும் கொண்டிருத்தல் வேண்டும் :—

உயரம்—5 அடி 6 அங்குலம்
நிறை—110 இருத்தல்
மார்பு அளவு—32 அங்குலம்

(உ) விவாகம் செய்யாதவராக இருத்தல் வேண்டும். பயிலுநர்/ கப்பல் நடுத்தரப்பணியாளர் பயிற்சியின் கீழ் இருக்கும் போது விவாகம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்.

5. சம்பளமும் படிகளும்.—கடற்படைச் சம்பளக் கோவையில் விதிக்கப்பட்டவாறு தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் தமது பதவிக்குரிய சம்பளமும் படிகளும் நியமிக்கப்படும் காலத்தில் கொடுக்கப் பெறுவர்.

(அ) ஏவுநர் பதவி வரையுள்ள உத்தியோகத்தருக்குக் கொடுக் கப்பட்டுவரும் ஆயுதந்தாங்கிய படைகளின் சம்பளக் குழுவினால் விதப்புரை செய்யப்பட்ட ஒன்றுதிரட்டிய சம்பள விகிதங்கள் பின்வருமாறு :—

பயிலுநர்—ஆண்டொன்றுக்கு ரூபா 5,160/-

கப்பல் நடுத்தரப் பணியாளர்—ஆண்டொன்றுக்கு ரூபா 5,520/-

பதில் உதவித் துணை நிலை அலுவலர்—ஆண்டொன்றுக்கு ரூபா 5,880/-

உதவித் துணைநிலை அலுவலர்—ஆண்டொன்றுக்கு ரூபா 7,500 தொடங்கி ரூபா 180/- கொண்ட 5 ஆண்டு படியுயர்வுகள் மூலம் ரூபா 8,400/- வரை.

துணைநிலை அலுவலர்—ஆண்டொன்றுக்கு ரூபா 9,240/- தொடங்கி ரூபா 180/- கொண்ட 8 ஆண்டுப்படி யுயர்வுகள் மூலம் ரூபா 10,680/- வரை.

துணைநிலை ஏவுநர்—ஆண்டொன்றுக்கு ரூபா 11,400/- தொடங்கி ரூபா 240/- கொண்ட 8 ஆண்டுப் படி யுயர்வுகள் மூலம் ரூபா 13,320/- வரை.

ஏவுநர்—ஆண்டொன்றுக்கு ரூபா 15,000/- தொடங்கி ரூபா 360/- கொண்ட 7 ஆண்டுப் படியுயர்வுகள் மூலம் ரூபா 17,520/- வரை.

6. சேவை நிபந்தனைகள்

(அ) காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறுள்ள, 1950 டிசெம்பர் 9 ஆம் திகதிய 10,187 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியீட்டில் பிரசுரிக்கப்பட்டுள்ள விதிகள் சேவை நிபந்தனைகளாகப் பொருந்தும்.

(ஆ) தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் சகாயநிதி நன் கொடைக்கு உரித்தாவதோடு தங்கள் சம்பளத்தின் அர சாங்கத்தால் நிர்ணயிக்கப்படும் விகிதமொன்றை ஆயு தந் தாங்கிய சேவைகள் சகாய நிதிக்கு இறுக்கவேண் டும். ஓய்வூதியமோ பணிக்கொடையோ கொடுக்கப்பட மாட்டா. அவ்வாறாயினும், தேர்ந்தெடுக்கப்படும் அபேட்ச கர் பயிலுனர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திகதிக்கு முன் ஸ்ரீ லங்கா குடியரசில் ஓய்வூதிய பதவியொன்றை வகித்தாராயின், அவர், காலத்துக்குக்காலம் திருத்தப் பட்டவாறுள்ளதும் 1962 டிசெம்பர் 7 ம் திகதிய 13,423 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான கடற்படை ஓய்வூதியமும் பணிக்கொடையும் என்ற நிய திப்படி ஓய்வூதிய உரிமைகளுக்கு உரித்துடையவராவர்.

(இ) ஸ்ரீ லங்கா கடற்படை அலுவலர்கள் எந்நேரத்திலாவது உலகின் எப்பாகத்துக்கும் கடமையின் பொருட்டோ அல் லது பயிற்சியின் பொருட்டோ அனுப்பப்படலாம்.

(ஈ) புதிதாகச் சேர்பவர்கள் அரசகரும மொழிக் கொள்கைக் கிணங்க குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற் படுத்துவதற்குமென இதுவரை ஆக்கப்பட்டனவும் இனி மேல் ஆக்கப்படக்கூடியனவுமான எவையேனும் விதிக ளுக்கு இணங்கி ஒழுகப்பணிக்கப்படுவார்கள்.

(உ) கீழே 7 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறு ஒரு உறுதியுரை யில் கையொப்பமிடுமாறு பெற்றோர்/அல்லது பாதுகாவ லர் வேண்டப்படுவதுடன் அவைகள் விண்ணப்பங்களு டன் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும். தேர்ந்தெடுக் கப்படும் அபேட்சகர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவ லர் இவ்வபேட்சகர் பதவி பெறுதற்கு முன்பு ஸ்ரீலங்கா குடியரசுடன் உறுதியுரைமூலம் ஒரு ஒப்பந்தத்தில் கைச் சாத்திட வேண்டப்படுவர்.

7. விண்ணப்பதாரரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுதி யுரையில் கையொப்பமிடவேண்டும்.

(அ) நான் ஸ்ரீ லங்கா கடற்படையில் பயிலுநர் பயிற்சி விண் ணப்பதாரர் என்பவரின் பெற்றோர்/பாதுகாவலர் ஆவேன்.

(ஆ) மேற்கூறப்பட்ட பெயருடைய விண்ணப்பதாரர் தேர்ந் தெடுக்கப்படுமிடத்து ஸ்ரீலங்காவில்/வெளிநாட்டில் பயிற்சி நெறி ஒன்றுக்குச் சமூகமளிக்க நான் இத்தால் பின்வருமாறு பொறுப்பு எடுப்பேன் :—

(i) எல்லாப் பிரத்தியேகச் செலவுகள் அதாவது பயிற் சிக்காலத்தின் போது விண்ணப்பதாரர்மீது ஏற் படக்கூடிய செலவுகளுக்கு.

(ii) மேலே குறிப்பிட்ட பெயருடைய விண்ணப்பதாரர் தான் பயிற்சிக்காலத்தின்போது ஆணைபெற்ற பாட்சார்த்திய நிலையைத் தன் விருப்பப்படி நிறுத் தும்போது ஸ்ரீ லங்கா குடியரசுக்கு அவர்மீது ஏற் படும் செலவுகளை மீள அளித்தற்கு.

(iii) மேலே குறிப்பிட்ட பெயருடைய விண்ணப்பதாரர் தன் பயிற்சிக்காலத்தில் எந்நேரத்திலாவது ஆணை வழங்குவதற்குத் தகுதியற்றவரெனப் பொறுப் புள்ள அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டால் (ஒழுக்க மற்ற காரணங்கள் அல்லது அவருடைய கட்டுப் பாட்டுக்குட்பட்ட வினைவுகள்) ஸ்ரீ லங்கா குடியர சுக்கு அவரால் ஏற்படும் செலவுகளை மீள அளித் தற்கு.

————,
கையொப்பம்.

பெரிய எழுத்துக்களில் பெயரும் முகவரியும் : ————.

திகதி : ————. சாட்சியின் கையொப்பம்.

பெரிய எழுத்துக்களில் பெயரும் முகவரியும் :———— ———.

திகதி : ————.

8. விண்ணப்பதாரர்களுக்கு அறிவுறுத்துரைகள்

கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பங்கள் கையெழுத்தில் தயாரிக்கப்படுவதுடன் கடற்படைத் தளபதி, ஸ்ரீ லங்கா கடற்படைத் தலைமை அலுவல கம், த.பெ. இலக்கம் 593, கொழும்பு 1 என்ற முகவரிக்குப் பதி வுத்தபால் மூலம் 1973 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்குமாறு அனுப்பிவைத் தல் வேண்டும்.

9. அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத்தாபனங்களில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள், திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் உத்தியோகத்தர் தெரியப்படின் அவர் அங்கிருந்து விடுவிக்கப்படுவார் என்றும் சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண் டும்.

10. விண்ணப்பங்களுடன் பின்வரும் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும் :—

(அ) பிறப்புப்பதிவுச் சான்றிதழ்

(ஆ) கல்வி, தொழில் தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்கள் ; அத்துடன்—

(இ) குறைந்தது இரண்டு சான்றிதழ்கள், விண்ணப்பதாரரை நன்கு நேரில் அறிந்த பொறுப்புவாய்ந்தவர்களிட மிருந்து, அவர்களில் ஒருவர் விண்ணப்பதாரர் கடைசி யாகக் கல்விகற்ற கல்லூரியின் அதிபராயிருத்தல் வேண் டும்.

11. குறிப்பிட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களிடமிருந்து ஆரம்பத் தெரிவு ஒன்று செய்யப்படும். ஆரம்ப நேர்முகப் பரீட்சையில் தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள், கடற்படைச் சேவைக்கு அவர்கள் தகுதியானவர்களெனக் கண்டுகொள்வதற் கென விசேட சார்புத் தேர்வு ஒன்றுக்குத் தோற்றும்படி பணிக் கப்படுவர். அதன்மேல் பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச் சின் செயலாளரினால் நியமிக்கப்படும் தெரிவுச்சபை ஒன்றினால் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் இறுதித் தெரிவு செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படும் அபேட்சகர்க ளுக்கு அத்தகைய நேர்முகத் தேர்வுக்கான இடம், நேரம், திகதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது தொடர்பான போக்குவரத்து அல்லது வேறு செலவுகள் ஸ்ரீ லங்கா குடியரசினால் கொடுக்கப்படமாட்டா.

டீ. பீ. குணசேகர,
கொமடோர்,
பதில் கடற்படைத் தளபதி.

ஸ்ரீ லங்கா கடற்படைத் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1,
1973 ஆம் ஆண்டு மாச்சு மீ 16 ஆந் உ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

பயிலுனர் பயிற்சிக்கான விண்ணப்பம்—ஸ்ரீ லங்கா கடற்படை

1. முழுப் பெயர் (பெரிய எழுத்துக்களில்) :————.

2. தேசிய இனம் (வம்சாவழியிலா அல்லது பதிவுமூலமா இலங்கைப் பிரசை என்பதைக் குறிப்பிடுக. பின்னையதானல் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக) :————.

3. முகவரி :————.

4. பிறந்த திகதி :————. 1973.1.1 இல் வயது— வருடம் :————. மாதம் :————. நாள் :————.

5. அண்மையிலுள்ள பொலீஸ் நிலையம் :————.

6. பின்வருவோரின் பெயர், பிறந்த இடம், இப்போதைய முகவரி முதலியவற்றைக் குறிப்பிடுக :—

| | முழுப்பெயர் | பிறந்த இடம் | இப்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | :———— | :————. | :————. |
| தாய் | :————. | :————. | :————. |

7. நீர் விவாகமானவரா ? அல்லது தனியாளா ?:————.

8. பாடசாலையில் என்ன விளையாட்டுச் சிறப்புகள் பெற்றுள்ளீர் ?:————.

9. பாடசாலையில் குறிப்பிடத்தக்க சிறப்புத்தரவல்ல ஏனைய பேறுகள் உமக்குண்டா ? :————.

10. ஆயுதந்தாங்கிய படைகளில், கடற்படைத் தொண்டர் படைகளில், பயிலுனர் சிறப்பணிகளில், சாரணர் இயக்கங்களில் உமக்கு முன்னைய அனுபவம் ஏதும் உண்டா ?:————.

11. இந்நியமனத்துக்கு உமக்குள்ள வேறு தகைமைகள் : ————.

12. ஆயுதந்தாங்கிய படைகள் எதற்காயினும் முன்னர் நீர் விண்ணப்பம் செய்தீரா ? அங்ஙனமாயின் அதன் பெறு பேறு என்ன ? :————.

13. பாடசாலைபற்றிப் பின்வரும் விபரங்களைத் தருக :—

| பாடசாலையின் பெயர் | திகதி சேர்ந்த விலகிய | பகிரங்கப்பரீட்சைகளும் சித்தியெற்ற பாடாங்களும் |
|---|---|---|
| ———— | ———— | ———— |

14. பாடசாலையை விட்டுவிலகியபின் உமது தொழில் முயற்சி பற்றிப் பின்வரும் விபரங்களைத் தருக :—

| வேலைக்கமர்தியவரின் பெயர் | தொழிலின் தன்மை | சேவைக்காலம் இருந்து—வரை | |
|---|---|---|---|
| :————. | :————. | :————. | :————. |

15. குணநலம்பற்றிய சான்றிதழ்கள் வழங்கியவர்களின் பெயர்களும் முகவரிகளும் :—
(அ) :————.
(ஆ) :————.

மேலே கொடுக்கப்பட்டுள்ள வினுக்களுக்கு அளிக்கப்பட்ட விடைகள் எனது அறிவுக்கு எட்டியவரை சரியானவையென நாம் நம்பிக்கையுடன் எனது நேர்மையின் பெயரில் உறுதியளிக்கிறேன். ஸ்ரீ லங்கா கடற்படையில் பயிலுநர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்களுக்குப் பொருந்தக்கூடிய பிரமாணங்களையும் நடைமுறைகளையும், மேலும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான சம்பளமும் சேவையும் பற்றிய வாய்ப்புக்களையும் நியதிகளையும் நான் படித்து அறிந்து கொண்டேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

3-577—16.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 51

---

### சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களம்

பண்ணை முகாமையாளர் பதவி

சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களத்தில் பண்ணை முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலுக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தில் செயலாளர், தோட்டத் தொழிற் துறைகள் அமைச்சு, த. பெ. இல. 1652, கொழும்பு 1. என்ற விலாசத்திற்கு 1973 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 14 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவே கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

குறிப்பு.—(i) கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்களை அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனல் ஆகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—(i) பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பளத்திற்கு உரிமையற்றதுமாகும். அரசாங்க சேவை சேமலாப நிதிக்கு உதவு தொகை செலுத்தப்பட வேண்டும். ஆரம்பகால சேவை மூன்று வருடங்களுக்கு தகுதி காண் காலத்தைக் கொண்டதாகும்.

(ii) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் அரசாங்கத்தின் கீழ் 1972 ம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ந் திகதிக்கு முன்னர் நிரந்தரமானதும் உபகாரச் சம்பளத்திற்கு உரிமையுள்ள பதவியை வகித்தவராயும் இருந்தால் ஆரம்ப காலத்தில் ஒரு குறிக்கப்பட்ட காலத்திற்குப் பதில் கடமையாற்ற நியமிக்கப்படுவார்.

3. சம்பளமும் ஏனைய படிகளும்.—இப்பதவிக்குரிய சம்பளத் திட்டம் பின்வருமாறு :—

திரட்டிய சம்பளம்.—வருடத்திற்கு ரூபா 7,500—3 × 180 ம். 2 × 240 உயர்வுகளைக் கொண்ட ரூபா 8,520. (ரூபா 8,040 க்கு முன்னர் வினைத்திறமைகாண் தடையுண்டு.)

4. தேவைப்படும் தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும்.

(i) (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் விவசாயத்தில் பட்டம் பெற்றவராயும்,

அத்துடன்

பயிர்ச் செய்கையில் 5 வருட அனுபவம் உடையவராயும் இருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) விவசாயப் பாடசாலையின் முதல் வருப்பு அல்லது இரண்டாம் வகுப்புச் சிரேஷ்ட தராதரப் பத்திரத்தை உடையவராயும்

அத்துடன்

பயிர்ச் செய்கையில் 10 வருட அனுபவம் உடையவராயும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—பண்ணை முகாமையாளராக அனுபவம் பெற்ற அபேசகர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ii) விண்ணப்ப முடிவுத் திகதியில் 25 வயதுக்குக் குறையாதவராயும், 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளோருக்கு இவ்வயதெல்லைகள் ஏற்புடைத்தாகா.)

(iii) நல்லொழுக்கமும் உடலுறுதியும் உடையவராயிருத்தல் வேண்டும்.

5. பின்வரும் சாதனங்களில் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ கேட்கப்படும் பொழுது சமர்ப்பிக்கும்படி விண்ணப்பதாரர் வேண்டப்படுவர் :

(அ) பிறப்புச் சான்றிதழ் (ஞானஸ்நானச் சான்றிதழ்களோ அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணங்களின் நோக்கத்திற்கு அமைய வங்கப்பெற்ற பிறப்புச் சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.)

(ஆ) பல்கலைக்கழகப் பட்டச் சான்றிதழ் அல்லது உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) இரு நற்சான்றிதழ்கள், இவற்றுள் ஒன்று பாடப்பணிப் பாளர், கல்லூரி ஆசிரியர் யல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) தொழிற் தகைமைக்கான சான்றிதழும் அல்லது தொழில் நுட்பத் தகைமைக்கான சான்றிதழும்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த உயர் தகைமைச் சான்றிதழ்கள்.

குறிப்பு.—(i) சாதனங்கள் எவையும் விண்ணப்பப் பத்திரத்துடன் அனுப்பப்படக் கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரரின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள அல்லது யாக்கங்களில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வத் தலைவர்களுக் கூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களோ அல்லது அவை சம்பந்தமாக கடிதத் தொடர்புகளோ தோட்டத் தொழில் துறைகள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்மேயொழிய இவ்வமைச்சில் உள்ள எந்த உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்புதல் கூடாது.

8. இவ்வர்த்தமானியின் I ம் பகுதி (II அ) ம் தொகுதியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

டொறிக் த சூஸா,
செயலாளர்,
தோட்டத் தொழிற்றுறைகள் அமைச்சு.

தோட்டத் தொழில் துறைகள் அமைச்சின் அலுவலகம்,
த. பெ. இலக்கம் 1652,
6, சேர் பார்ரன் ஜயத்திலக்க மாவத்தை,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு மார்ச் மாதம்.

மாதிரி விண்ணப்பப் படிவம்
பண்ணை முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்
சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களம்

(இவ்விண்ணப்பப் படிவத்துடன் எந்தவொரு சாதனமும் இணைக்கப்படுதல் கூடாது.)

1. முழுப் பெயர் (உறுப்பெழுத்தில்) :————.

2. அஞ்சல் முகவரி :————.
(முகவரியில் ஏற்படும் மாற்றங்கள் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்)

3. (அ) பிறந்த திகதி :————.
வருடம் :————. மாதம் :————. தேதி :————.
(ஆ) விண்ணப்ப முடிவுத் தேதியில் சரியான வயது :————.
வருடங்கள் :————. மாதங்கள் :————. நாட்கள் :————.

4. வம்சாவழி காரணமாகவா, அல்லது பதிவு காரணமாகவா இலங்கைப் பிரசையெனக் குறிப்பிடுக :————.
(பதிவு காரணமாக இலங்கைப் பிரசையெனின் விவரங்களைத் தருக)

5. பிறந்த இடம் :
(அ) விண்ணப்பதாரர் :————.
(ஆ) விண்ணப்பதாரரின் தந்தை :————.
(இ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப்பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப்பூட்டன் :————.

6. திருமணமானவரா, தனியாளா, விதவையா அல்லது தாரமிழந்தவரா எனக் குறிப்பிடுக :————.

7. பின்வரும் பாடங்களில் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சை :
(i) சிங்களம் :————.
(ii) தமிழ் :————.
(iii) ஆங்கிலம் :————.

8. 12 வயதிலிருந்து நீர் கல்விபெற்ற பாடசாலைகள், கல்லூரிகள், ஏனைய நிறுவனங்கள் :

| பொதுக்கல்வி | | உத்தியோகக் கல்வி | |
|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் வரை | கல்வித் தாபனம் | தொடக்கம் வரை |
| 1. | | 1. | |
| 2. | | 2. | |
| 3. | | 3. | |

9. நீர் கடன் தொல்லைகள் அற்றவரா? இல்லையெனின், கடன் பொறுப்புகளின் தொகை என்ன? :————.

10. சட்ட நீதிமன்றத்தில் ஏதாவது குற்ற பாதகத்திற்குக் குற்றம் சாட்டப்பட்டுள்ளீரா? அப்படியானால் வழக்கு இலக்கத்தைக் குறிப்பிட்டு, தேதிகளோடு முழு விபரங்களையும் தருக :————.

11. பாடசாலைக் கல்வி, உத்தியோகக் கல்வி, நுண்தொழிற் கல்வித் தகைமைகள் :————.
(பல்கலைக் கழகத்துச் சகல பட்டங்கள், திறமைகள், உத்தியோகக் கல்வி/நுண்தொழிற் கல்வித் தகைமைகள், விசேட வகுப்புப் பட்டங்களாயின் அவற்றின் விபரங்கள், தோற்றிய பாடங்கள், நிறுவனங்களின் பெயர்கள் என்பவற்றைத் தேதிகளுடன் தருக.)

12. தற்போதைய தொழிலும், முன்னர் பதவிகளில் இருந்தால், அவற்றின் விபரங்களும் :————.

| பதவி | தொடக்கம்/வரை | ஆண்டுச் சம்பளம் ரூபா |
|---|---|---|
| (1) | | |
| (2) | | |
| (3) | | |

(அரசாங்க உத்தியோகத்திலிருந்து நீங்கிய காரணம் கீழேயுள்ள 13 ஆம் நிரப்புப் பிரிவிற் குறிப்பிடப்படல் வேண்டும்.)

13. மேலும் வேறு விபரங்கள் :————.

14. உம்மைப் பற்றிய விபரங்களைப் பெறக்கூடிய உமக்கு அறிந்த இருவரின் பெயர்களையும் முகவரிகளையும் தருக :————.

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவை என்றும் நான் அத்தாட்சிப் படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, அல்லது சரியற்றவையென்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனாக்கப்படுவேனென்றும், நியமனம் பெற்றபின் சரியற்றவை என்று கண்டிபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி பதவியால் நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

தேதி :————.

3-574—16.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 51

---

கடற்றொழில் திணைக்களம்
ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி

கடற்றொழில் திணைக்களத்தில் 4 ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு பின்வரும் தேதியன்று அல்லது அதற்கு முன்னர், செயலாளர், கடற்றொழில் அமைச்சு, காலிமுகம், த. பெ. இல. 1707, கொழும்பு-3 என்ற விலாசத்தை வந்தடையவேண்டும்—

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள்—1973 ஏப்பிறல் 18
(ஆ) கடல் கடந்த விண்ணப்பங்கள்—1973 ஏப்பிறல் 18

குறிப்பு.—(i) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறுமிடத்து அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனால் வரும் இடருக்கும் தாமே பொறுப்பாவர்.

(ii))கடல் கடந்த அபேட்சகர்கள் அவர்கள் விரும்பினால், அந் நாட்டிலுள்ள அல்லது தாம் வதியும் நாட்டுக்கண்மையில் இருக்கும் நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதிகள் அலுவலகங்களில், இலங்கைக் கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு குறிப்பிட்ட தேதிக்குமுன் விண்ணப்பப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

(iii) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கைக் குடியரசின் கீழ் நியமனம் பெற வெளிநாட்டில் தேர்ந்தெடுக்கப்படும் இலங்கையரான உத்தியோகத்தர், சேவைக்கு உடற்றகுதி உடையவரெனன்பதை உறுதிப்படுத்தற் பொருட்டு, தம்மை, அங்கீகரிக்கப்பட்ட மருத்துவச் தொழில் செய்வோரால் சோதிக்கப்படுவதற்கு உடன்படுமாறு வேண்டப்படுவர். இத்தகைய சோதனைக்கான கட்டணமும், இலங்கைக்கு வருவதற்கு ஏற்படும் பிரயாணச் செலவும் உத்தியோகத்தராலேயே செலுத்தப்படவேண்டும்.

2. ஒப்பந்த நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.— (i) பதவி நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளம் அற்றதுமாகும். நியமனம் 3 ஆண்டுக்காலத்துக்குத் தகுதிகாண் முறையில் இருக்கும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அரசாங்க சேவை சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தவேண்டும். எனினும், நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளம் பெறுவதுமான பதவியிலுள்ள ஒரு உத்தியோகத்தர் தெரியப்படுமிடத்து, இப்புதிய பதவியிலும் தொடர்ந்து இளைப்பாற்றுச் சம்பளத்தைப் பெறும் வாய்ப்புடைய

வராவர். நியமனம் முதற்கண் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பதில் கடமையாற்ற வேண்டிய நிலையில் இருக்கும். பதவிக்குக் தகைமையற்றவரென அவர் காணப்படின் இப்பருவத்தின் எக்காலத்திலும் இவரின் முந்திய பதவிக்கு மாற்றப்படலாம்.

(ii) மேலதிகப் பயிற்சியும், அனுபவமும் பெறுதற் பொருட்டு, உத்தியோகத்தர் வெளிநாடு செல்ல வேண்டப்படலாம்.

(iii) உத்தியோகத்தர் வெளிநாட்டில் பயிற்சிக்காகத் தெரியப்படுமிடத்து.—

(அ) ஏனையவற்றுடன், தனது பயிற்சியைப் பிரமாணிக்கத்துடனும், ஊக்கத்துடனும், கடைப்பிடித்து திருத்தியான முறையில் பூரணப்படுத்துவதாகவும் வேண்டப்படின், (பயிற்சி முடிவுற்றபின் இலங்கைக் குடியரசால் தீர்மானிக்கப்படும்) ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு இலங்கைக் குடியரசுக்குச் சேவை செய்வதாகவும் பொறுப்பேற்பதோடு,

(ஆ) உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகட்கும், விதிக்கட்கும் இயைய நடக்கத்தவறின், பயிற்சி நெறியின் முழுச் செலவையும், அதாவது இலங்கைக் குடியரசாலோ அல்லது வேறு எந்த முகவராண்மையாலோ அல்லது அவ்வப்பகுதியின் கூட்டிணைலுமோ இப்பயிற்சிநெறி முழுவதும் சம்பந்தமாகப் பொறுப்பேற்கப்பட்ட செலவை (அஃதாவது, சம்பளம், படி, பிரயாணச் செலவுகள், கட்டணங்கள் முதலியன), இலங்கைக் குடியரசுக்குத் திருப்பிக் கட்டவும் பொறுப்பேற்பதாக, இலங்கைக் குடியரசுடன் ஒரு உடன்படிக்கையில் ஈடுபடவேண்டும்.

3. **சம்பள அளவுத்திட்டம்.**—இப்பதவிக்கான வழங்கப்படும் சம்பளத் திட்டம் வருமாறு—ரூபா 7,440 இலிருந்து ரூபா 16,320 வரைசெல்லும், ரூபா 360 வீதம் 10 ஆண்டுகளும், ரூபா 480 வீதம் 11 ஆண்டுகளும் சம்பள உயர்ச்சி வழங்கப்படுகையில், ரூபா 12,000 க்கும் ரூபா 14,880 க்கும் முன் வினைத்திறன்காண் தடையில் நிறுவப்படும். தெரியப்பட்ட அபேட்சகர் ஒரு விதித்த பட்டதாரிப் பட்டமோ, அல்லது தமக்குரிய விஞ்ஞான முயற்சித் துறையில் ஒரு உயர்ந்த பட்டமோ, தாத்தகுதித் தேர்வுப் பத்திரமோ பெறுவிடின், ரூபா 11,520 க்குமேல் வருடாந்தச் சம்பளமாகப் பெறத் தகுதியுடையவராகார்.

குறிப்பு.—(i) புதிதாகச் சேர்க்கப்படுகையில் ஒரு உத்தியோகத்தர் அடிப்படை விஞ்ஞானப் பட்டத்திலும் தாமுயர்ந்த பீ. எச்டி. பட்டமோ அல்லது எம். எஸ்சி. பட்டமோ உடையவராயிருப்பின், ஆரம்ப வருடாந்தச் சம்பளம் ரூபா 8,520 ஆகவிருக்கும்.

(ii) தெரியப்பட்ட அபேட்சகரின் தகைமையும், அனுபவமும, சம்பளச் சலுகைக்குப் பாத்திரமாயிருப்பின், தாபனப் பணிப்பாளரின் உசாவுதலுடன் அவர் அத்தகைய சம்பளத்தில் அமர்த்தப்படலாம்.

4. **தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வருவனவற்றைத் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவவேண்டும்—

(அ) சிறந்த நல்லொழுக்கமும், உடலுறுதியும் உள்ளவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) 1973 ஏப்பிறல் 18 ந் தேதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்குக் கூடாதவராயும் இருத்தல் வேண்டும்.

(இ) *கடற்றொழில் உயிரியற்றுறையில் ஈடுபட்டுள்ள அபேட்சகர்கள் ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இரசாயனவியலை அல்லது தாவரவியலைத் துணையாகக் கொண்டு விலங்கியலைச் சிறப்பாக பயின்ற முதலாந்தர அல்லது இரண்டாந்தர மாண்புப் பட்டதாரியாகவிருக்க வேண்டும்.

அல்லது

*இயற்பியல் சமுத்திரவியற்றுறையில் ஈடுபட்டுள்ள அபேட்சகர்கள் ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் தூய கணிதத்தைத் துணையாக கொண்டு பௌதிகத்தைச் சிறப்பாகப் பயின்ற முதலாந்தர அல்லது இரண்டாந்தர மாண்புப் பட்டதாரியாகவிருக்க வேண்டும். (*இறுதிப் பரீட்சையிற் தோன்றி பரீட்சை முடிவுக்காகக் காத்திருக்கும் அபேட்சகர்களும் விண்ணப்பிக்கலாம்).

5. கேட்கப்படும் பொழுது, தனித்த அல்லது பின்வரும் எல்லாப் பத்திரங்களையும் சமர்ப்பிக்குமாறு அபேட்சகர் வேண்டப்படுவர்—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு.கு. ஞானஸ்நானச் சான்றிதழோ உதவி பெறும் பாடசாலைகளின் பிரமாணக் கோவைக்கோ வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா),

(ஆ) உயர்ந்த கல்வி அல்லது பட்டச் சான்றிதழ்,

(இ) படிப்பு அதிபரிடமிருந்தோ, கல்லூரி விரிவுரையாளரிடமிருந்தோ பேராசிரியரிடமிருந்தோ பெற்ற ஒன்று உள்ளடங்கிய இரண்டு நன்னடத்தைச் சான்றிதழ்கள்,

(ஈ) உயர் தொழிற்றகைமைச் சான்றிதழ் அல்லது தொழில்நுட்பத்தகைமைச் சான்றிதழ் அல்லது இரண்டும், -

(உ) சிங்களம், தமிழ் ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்து பெற்ற உயர்ந்த தேர்வுச் சான்றிதழ்.

குறிப்பு.—(i) விண்ணப்பப்படிவத்துடன் எச்சாதனமோ, சாதனங்களின் பிரதியோ இணைக்கப்படலாகாது.

(ii) கேட்கப்படும் பொழுது சாதனங்களை வழங்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. இலங்கைக் குடியரசுச் சேவையிலுள்ள உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள் அவ்வத்திணைக்களத்தின் தலைவரினூடாக அனுப்பப்படல் வேண்டும். எனினும், அவர்கள் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை, கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு, முடிவுறுந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அவரைச் சென்றடையுமாறு நேராக அனுப்பவேண்டும்.

7. விண்ணப்பங்களும், இது சார்ந்த தொடர்புகளும், கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்படவேண்டுமேயன்றி இவ்வமைச்சைச் சேர்ந்த எவ்வுத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பப்படலாகா.

8. இவ்வர்த்தமானியின் பகுதி I தொகுதி (II அ) இன் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள. இலங்கைக் குடியரசுச் சேவைப் பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளின் கவனத்தைக் கோருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

9. விண்ணப்பங்கள் முடிவுறும் திகதியிலிருந்து 3 வாரங்களுக்குள் விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமை பற்றி அபேட்சகருக்கு அறிவிக்கப்படும். ஒப்புதற் கடிதம் பெறாவிடின், கொழும்பு 3, காலிமுகத்திலுள்ள கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும்.

செயலாளர்,
கடற்றொழில் அமைச்சு.

கடற்றொழில் அமைச்சு,
காலிமுகம்,
கொழும்பு 3,
1973 மார்ச் 6.

### கடற்றொழில் திணைக்களம்

ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பப் படிவம்

(குறிப்பு.—விண்ணப்பம் அனுப்பப்படும் அஞ்சலுறையில் இடப் பக்கத்து மேல் மூலையில் "ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" என எழுதிப் பதவு அஞ்சலில் செயலாளர், கடற்றொழில் அமைச்சு, த. பெ. எண். 1707, காலிமுகம், கொழும்பு 3 என்ற முகவரிக்கு அதை அனுப்பவேண்டும்).

1. முழுப்பெயர் ————.
2. முகவரி :————.
3. பிறந்த திகதியும் இடமும் :————.
   1973 :——— இல் வயது. ஆண்டு :——— மாதம் :——— நாள் :————.
4. நாட்டினம் :————.
5. விவாகமானவரா, தனியாளரா ? :————.
6. கல்வித் தகைமைகள் :————.
7. தொழிற்றுறைத் தகைமைகள் :————.
8. பாடசாலையை விட்டதிலிருந்து இதுவரை பார்த்த தொழிலும்/அல்லது பயிற்சியும் :————.
   (தொழிலிலமர்ந்த திகதியும் விட்ட திகதியும், விடுவதற்கான காரணங்களும் குறிப்பிடவேண்டும்).
9. தற்போதைய வேலை :————.
10. நற்சான்றிதழ்கள் தந்தவர்களின் பெயர்களும் பதவிகளும் : ————.
11. வேறு ஏதாவது தகைமைகள் :————.

விண்ணப்பத்தில் தந்த விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையுமென யான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கே தந்துள்ள விபரங்களுள் எவையாவது பொய்யானவையோ சரியற்றவையோவெனக் காணப்பட்டால் தெரிவுக்கு முன்னர் யான் தகைமை நீக்கத்துக்கு ஆட்படலாமென்றும் நியமனம் பெற்றபின் விபரச் சரியின்மை கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கு ஆட்படலாமென்று அறிந்துள்ளேன்.

————.
ஒப்பம்.

திகதி :————.

3-575—16.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 51

இல. சுபோ/ஆய/20

**சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம்**

பரிசோதனை அலுவலர் பதவிகள்

ஸ்ரீலங்கா குடியரசின் 1973 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ந் திகதிய 45 ம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பத்தின் முடிவுத் தேதி 1973 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 3 ந் திகதி வரைக்கும் (உட்பட) நீடிக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கலாநிதி. ஈ. ஜெயநெத்தி,
பணிப்பாளர்,
ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம்.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம்,
159, தர்மபால மாவத்தை,
கொழும்பு 7,
5.3.1973.

3-563—16.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 51

---

**அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்**

கடைச்சலெந்திர/காய்ச்சிணைக்கும் பொறிதொகுதி இயக்குநர்

இக்கூட்டுத்தாபனத்தில் மேற்கூறப்படும் பதவிக்கான விண்ணப்பங்கள் தேவையெனக் கருதப்படும் தகுதிகள் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து கீழ்கையொப்பமிடுபவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. சம்பள விகிதம்: ரூபா 310—12×10—ரூபா 430 (மாதமொன்றிற்கு எல்லாமுட்பட)

2. வயதெல்லை: 25—40 வரை

3. கல்வித்தகமை, அனுபவம் மற்றும் தேவைகள்: சி. பா. த. ப. பரீட்சையில் தேறியவரும் அரசாங்கத் திணைக்களமொன்றில் அல்லது கூட்டுத்தாபமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரத்தியேகத்துறையொன்றில் கடைச்சலெந்திர, காய்ச்சியிணைக்கும் பொறித்தொகுதி வேலையில் 5 வருட அனுபவம் பெற்றவரும் அல்லது க. பா. த. ப. பரீட்சையும் மேற்கூறிய துறைகளொன்றில் இவ்வியந்திரங்களில் 10 வருட சேவை அனுபவம் பெற்றுள்ளவருமாகிய ஒருவராயிருத்தல் வேண்டும்.

கடைச்சலெந்திர; காய்ச்சியிணைக்கும் பொறித் தொகுதி பற்றிய கல்விப்பாடத்திட்டமொன்றினை அங்கீகரிக்கப்பட்ட நிலையம் அல்லது நிறுவகமொன்றில் படித்துத் தேறியுள்ள ஒருவருக்கு விசேட சலுகை காட்டப்படும்.

இக்கூட்டுத்தபானக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் படிவங்களில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்ட கடிதவுறைகளில் 1973 மார்ச்சு 30 அன்று அல்லது அதற்கு முன்பு தலைவர், அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், 2 பி, டி பொன்சேகா வீதி, கொழும்பு-5 என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும். நேர்முகமாக வருபவர்கள் விண்ணப்பப்படிவங்களை இக்காரியாலய சாதாரண அலுவல் நேரங்களிலும் மற்றவர்கள் முத்திரை ஒட்டப்பட்டுத் தமது விலாசமிடப்பட்ட கடிதவுறைகளை (அளவு 9″×4″) எனக்கனுப்பியும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

தலைவர்,
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்.

2 பி, டி பொன்சேகா வீதி,
கொழும்பு-5,
1973 மார்ச்சு 6 ஆம் திகதி.

3-582—16.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 51

---

**சட்டவரைநர் திணைக்களம்**

அமய (ஆங்கில)ச் சுருக்கெழுத்தாளர் பதவி

மேற்கூறப்பட்ட திணைக்களத்தில் அமய (ஆங்கில)ச் சுருக்கெழுத்தாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தில் இருக்கவேண்டிய விண்ணப்பங்கள் 1973 மார்ச்சு 26 ஆந் தேதியன்று அல்லது அதன் முன்னர் கீழ்க் கையொப்பமிட்டவருக்குப் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். கடிதவுறையின் இடதுபக்க மேல்மூலையில் "அமய (ஆங்கில)ச் சுருக்கெழுத்தாளர் பதவிக்கான விண்ணப்பம்" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகள்.**—நியமனம் முழுக்க முழுக்க அமய அடிப்படையிலானது. தேர்ந்தெடுக்கப்பட்டவரின் சேவை ஒரு நாள் அறிவித்தல் மூலம் முடிவுறுத்தப்படக்கூடியதாகும். 682 ஆம் 685 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கைகள் தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு ஏற்புடையனவாகா. திறைசேரியின் "X" கிளையில் பதிவு செய்வதற்கான கோரிக்கைக்குரிய உரிமை எதையும் அவர் உடையவராகார்.

3. **கல்வித் தகைமைகள்.**—

(அ) இலங்கை சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திர வகுப்பில் சித்தியடைந்தவராக அல்லது ஆங்கிலத்தில் ('அ' பாடத் திட்டம் அல்லது 'ஆ' பாடத்திட்டம்) அல்லது ஆங்கில இலக்கியத்தில் சித்தியுட்பட இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர வகுப்பு (சாதாரணதர)த் தேர்வில் சித்தியடைந்தவராக; அல்லது

(ஆ) ஆங்கிலமொழி மூலத்தில், கல்வித் திணைக்களத்தின் அல்லது கல்வித் திணைக்களத்தினல் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையின் கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பில் சித்தியடைந்தவராக, இருத்தல் வேண்டும்.

4. **ஏனைய தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும் தான்—

(அ) இலங்கைப் பிரசை என்பதற்கும்;

(ஆ) விண்ணப்பங்கள் முடிவடையுந் தேதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்குக் கூடாதவராகவும் இருக்கின்றார் என்பதற்கும்;

(இ) அரசாங்கத் திணைக்களத்தில், அரசாங்கக் கூட்டுத்தாபனத்தில் அல்லது தனியார்துறைத் தாபனத்தில் ஆங்கிலச் சுருக்கெழுத்தாளராகக் குறைந்தது மூன்றாண்டுகளாவது அனுபவமுடையவரென்பதற்கும்; அத்துடன்

(ஈ) சிறந்த நன்னடத்தையும் தேகாரோக்கியமும் உடையவரென்பதற்கும், திருத்திகரமான சான்று காட்டுதல் வேண்டும்.

5. **சம்பளம்.**—(யாவுமுட்பட) நாளொன்றுக்குப் பத்து ரூபா. வேலைசெய்யும் நாட்களுக்கு மட்டுமே சம்பளம் கொடுக்கப்படும்.

6. **தேவைப்படும் வேகம்.**—

(அ) சுருக்கெழுத்தில் எடுத்தில்—நிமிடத்துக்கு எண்பது சொற்கள் (ஆங்கிலம்);

(ஆ) பார்த்தெழுதல்—நிமிடத்துக்கு ஏழு சொற்கள் (ஆங்கிலம்); அத்துடன்

(இ) தட்டெழுதல்—நிமிடத்துக்கு முப்பது சொற்கள்(ஆங்கிலம்).

7. விண்ணப்பகாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் கீழ்க் குறிப்பிடப்படும் பத்திரங்களின் பிரதிகளை (மூலப்பிரதிகளை அல்ல) சேர்த்து அனுப்புதல் வேண்டும்.—

(அ) பிறப்புச் சான்றிதழ்;

(ஆ) கல்வித் தகைமை சம்பந்தமான சான்றிதழ்கள்;

(இ) அண்மைக்காலத்தில் பெற்றுக்கொண்ட இரு நற்சான்றிதழ்கள்.

**குறிப்பு.**—சான்றிதழ்களினதும் பத்திரங்களினதும் பிரதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

8. நியமிக்கப்பட்ட நாளிலும் நேரத்திலும் நேர்முகப் பரீட்சைக்காகவும் தகைமைப் பரீட்சைக்காகவும் விண்ணப்பகாரர்கள், அழைக்கப்பட்டால் கொழும்பு-12, கோட்டடிக்குச் சமுகமளிக்கச் சித்தமாயிருத்தல் வேண்டும். இது தொடர்பாகப் பயணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

ஓ. எம். டி. அல்விஸ்,
சட்டவரைநர்.

சட்டவரைநர் திணைக்களம்,
கோட்டடி,
கொழும்பு-12.

மாதிரி விண்ணப்பப்படிவம்
அமய (ஆங்கில)ச் சுருக்கெழுத்தாளர் பதவி

1. முழுப்பெயர் திரு/திருமதி/செல்வி :————.
2. தற்போதைய முகவரி.————.
3. பிறந்த தேதியும் விண்ணப்பம் முடியுந் தேதியன்றுள்ள வாறுன வயதும் :————.
4. வம்சாவழி மூலமான அல்லது பதிவுமூலமான இலங்கைப் பிரசையா ? .————
5. தற்போதைய தொழில், ஏதேனும் இருப்பின்.————.
6. தொழிலில்லாதிருப்பின், முன்னைய தொழில், (ஏதேனும் இருப்பின்) அதன் விபரங்களும், சேவை முடிவுறுத்தற்கான காரணமும் :————.
7. கல்வித் தகைமைகள் :————.
8. வேகம்.—
   (அ) சுருக்கெழுத்து :————.
   (ஆ) பார்த்தெழுதல் :————.
   (இ) தட்டெழுதல் :————.
9. ஏதேனும் விசேட தகைமை பற்றிய விபரங்கள் :————.
10. நற்சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ள ஆட்களின் பெயர்களும் முகவரிகளும் :—
   (அ) ————.
   (ஆ) ————.

விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதன்கண் அடங்கியுள்ள ஏவையேனும் விபரங்கள் பொய்யானவை என அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும், நியமனத்தின் பின்னராயின் வேலைநீக்கஞ் செய்யப்படுவதற்கும் ஆளாக வேண்டும் என்பதையும் நான் அறிவேன்.

.....................................
விண்ணப்பகாரரின் ஒப்பம்.

திகதி :————.

3-688—16.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 51

---

கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்
வெற்றிடங்கள்

பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவி

கல்வித் தகைமைகளும் அனுபவமும்.—ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாகவும் அத்துடன் பொலீஸ் அல்லது படைச் சேவைகளில் செய்திமடல்படுத்தப்பட்ட/ஆணை பெற்ற உத்தியோகத்தர் தரத்தில் 3 வருட அனுபவம் உடையவராக இருக்க வேண்டும்; அல்லது ஒரு பெரிய கைத்தொழில்/வர்த்தக அரசாங்க நிறுவனத்தில் பாதுகாப்பு வேலையில் 3 வருட அனுபவமுடையவராக இருக்க வேண்டும்.

அல்லது

சி. பா. த. ப. அல்லது க. பொ. த. ப. (சா.த.) பரீட்சையில் சித்தியெய்தியிருக்க வேண்டும். அத்துடன் பொலீஸ்/படைச்சேவைகளில் 10 வருட அனுபவம் உடையவராக இருக்க வேண்டும். இதில் 5 வருடங்களுக்கு பொலீஸ் பரிசோதகர் அல்லது அதற்குச் சமமான தரத்தில் இருந்திருக்க வேண்டும். தீ அணைப்பதிலும் அதைத் தடுப்பதிலும் அனுபவமிருப்பின் அவை மேலதிக தகைமைகளாகக் கவனிக்கப்படும்.

வயது.—30 வயதுக்கு மேல்.

சம்பளம்—$\frac{\text{ரூபா 800—1,115 மா. ஒ.}}{7 \times 45}$

லாம் உட்பட).

அரசாங்க திணைக்களங்கள், அரசாங்க உதவிபெறும் திணைக்களங்கள் மற்றும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் என்பவற்றிலிருந்து விண்ணப்பங்கள் அனுப்பும் ஊழியர்கள் அவ்விண்ணப்பங்களைத் தமது திணைக்களங்களின் அல்லது கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

வாழைச்சேனை/எம்பிலிப்பிட்டிய அல்லது இத்தீவில் உள்ள இக் கூட்டுத்தாபனத்தின் ஏந்த நிறுவனங்களிலும் தங்கியிருந்து வேலை செய்யும்படி தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் வேண்டப்படுவர்.

இக் கந்தோரில் கிடைக்கப்பெறும் படிவங்களில் விண்ணப்பதாரர்கள் தமது சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து 1973.04.04 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பொது முகாமையாளர் அவர்கட்குக் கிடைக்கக் கூடியதாக, கீழ் காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

தபாலில் விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புபவர்கள் தங்களது விலாசம் பொறித்த முத்திரை ஒட்டிய நீண்ட உறையினை அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

தேவையான தகைமைகள் உள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

பொது முகாமையாளர்.
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.
356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2.

3-605—16.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 51

---

இல. : வெ.மு./4/145

கல்வி அமைச்சு

பொதுநலவரசுப் புலமைப் பரிசில்கள்,
நியூசிலாந்து—1974 ம் ஆண்டு

பொதுநலவரசுப் புலமைப் பரிசில்கள், இணையுரிமைப் பரிசில்கள் திட்டத்தின் கீழ் நியூசிலாந்திலுள்ள உயர் கல்வி நிலையங்களில் பட்டப்பின் படிப்புக்கு அல்லது ஆராய்ச்சிக்கென 1974 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடங்கும் கழகவாண்டிலிருந்து செல்லுபடியான நியூசிலாந்து அரசாங்கத்தால் வழங்கப்படும் புலமைப் பரிசில்கள் வழங்கும் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் பின்வரும் படிப்புத் துறைகள் சம்பந்தமாகவே ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| விவசாயவியல் | பூகர்ப்பவியல் |
| தோட்டச்செய்கை | மிருக மருத்துவம் |
| நுண் உயிரியல் | கால்நடை வளர்ப்பு |
| சுரங்க அகல்வும் உலோகியலும் | |

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு.—(1) புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ஆந் திகதிய 514 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(2) சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதாரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ஆம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

(3) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

*2. கால எல்லை.*—புலமைப் பரிசில் இரண்டு கழகவாண்டுகளுக்கும் இடைப்பட்ட கோடைக் காலங்களுக்கும் செல்லுபடியாகும்.

எனினும், துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு நியூசிலாந்து அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக்காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

*3. தகவுத்திறன்.*—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும் :—

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்,

(ii) 1974.3.1 அன்று 35 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) விரும்பும் பட்டப்பின் படிப்புப் பயிற்சி நெறிக்குப் பொருத்தமான பாடங்களில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் இரண்டாம் வகுப்புப் பட்டமேனும் பெற்றிருக்க வேண்டும். (பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்பவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(iv) ஆங்கிலத்தில் உயர்ந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு.—(1) அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதாவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறிசெய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.3.1974 அளவில் நிறைவேற்று இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

(2) தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையாராகார். படிவத்தின் 15 (ஈ) ஆம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

*4. அளிப்பு நிபந்தனைகள்.*—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) நியூசிலாந்து அதிகாரிகளால் ஒழுங்கு செய்யப்படுதற்கமைய நியூசிலாந்துக்குப் போய்வர கப்பல் அல்லது விமான மூல சுற்றுப்பயணத்தார் வகுப்புப் பிரயாணம். (தாபரிப்பிலுள்ளவர்களுக்கான செலவுக்கு ஏற்பாடொன்றும் சேர்க்கப்பட்டில்லை).

(ஆ) அங்கீகரிக்கப்பட்டுள்ள கற்கை, ஆய்கூட, பரீட்சைக் கட்டணங்கள்.

(இ) நியூசிலாந்துக்குப் போய் அடையும் திகதி தொடக்கம் சொந்தத் தாபரிப்புச் சகாயப்படியாக மாதாந்தம் $NZ 175.

(ஈ) புத்தகங்களுக்கும் உபகரணங்களுக்குமென வருடாந்தம் $NZ 50 கொடை.

(உ) பொருத்தமானவிடத்து உடுப்புகளுக்கான சகாயப்படியாக $NZ 80 வரை உஷ்ணந்த ரேகைக்குள்ளான நாடுகளிலிருந்து வருபவர்களுக்கு இது பொருத்தமாகும்.

(ஊ) செவிப்புல துணைச்சாதனங்கள், மூக்குக் கண்ணடிகள் யாதேனும் பற்சிகிச்சை தவிர்ந்த ஏனைய வைத்திய, வைத்தியசாலைச் செலவுகள்.

(எ) அவருடைய மனைவி ஏற்கனவே புலமைப் பரிசில் ஒன்றினை பெற்றிராத விடத்து அல்லது உத்தியோகத்திலில்லாத விடத்து, விவாகம் செய்தவர்களுக்கு விவாகச் சகாயப் படியாக வருடாந்தம் $NZ 540.

(மேற்குறித்த சகாயப்படிகள் மீது நியூசிலாந்து அரசாங்கம் வரி விதிக்காது.)

குறிப்பு.—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

*5. நேர்முகப் பரீட்சை.*—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்விதச் செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

*6. உடன்படிக்கை.*—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், நியூசிலாந்துக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில் சம்பளங்கள், சகாயப் படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

*7.வைத்தியப் பரீட்சை.*—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் நியூசிலாந்தில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்வதற்கு வேண்டிய் உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேறவேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியை பின்பற்றுவதால், அரசாங்க உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில், கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார். ஏனையோரைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து திரும்பியதும் அவர்களுக்கு உத்தியோகம் அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கவில்லை.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டபின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள் 1973.3.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அனுப்பப்படவேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10/- பெறு

மதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத் தேவை அமையும். கல்வி அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1973 ம் ஆண்டு மார்ச் மீ 7 ந் வ.

3-642/1—16.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 51

---

இல : வெ. மூ/4/147

**கல்வி அமைச்சு**

**பொதுநலவரசுப் புலமைப் பரிசில்கள், அவுஸ்திரேலியா 1974 ஆம் ஆண்டு**

பொதுநலவரசுப் புலமைப் பரிசில்கள், இணையுரிமைப் பரிசில்கள் திட்டத்தின் கீழ் 1974 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடங்கும் கழகவாண்டிலிருந்து அவுஸ்திரேலியாவிலுள்ள உயர் கல்வி நிலையங்களில் பட்டப்பின் படிப்புக்கென அவுஸ்திரேலியா அரசாங்கத்தால் வழங்கப்படும் புலமைப் பரிசில்களை அளித்தற் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

படிப்புத் துறைகள் தொடர்பில் எவ்வித கட்டுப்பாடும் இல்லை. எனினும், சாதாரணமாக கொழும்புத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்படாத விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்த பின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு.—(1) புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ஆந் திகதிய 514 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச் சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம்பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(2) சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமைபுரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ஆம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

(3) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. கால எல்லை.—புலமைப் பரிசில் காலம் சாதாரணமாக இரண்டு கழகவாண்டு அளவினதாகும்.

எனினும், துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு அவுஸ்திரேலியா அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. தகவுத்திறன்.—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும் :—

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1974.3.1 அன்று 28 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) விரும்பும் பயிற்சி நெறிக்குப் பொருத்தமான பாடங்களில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் இரண்டாம் வகுப்புப் பட்டமேனும் பெற்றிருக்க வேண்டும். (பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்பவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(iv) ஆங்கிலத்தில் உயர்ந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு.—(1) அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.3.1974 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

(2) தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையவராகார். படிவத்தின் 15(ஈ) ஆம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. அளிப்பு நிபந்தனைகள்.—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) விமானமூலம் மிகக்கிட்டிய மார்க்கமாக அவுஸ்திரேலியாவுக்குப் போய்வர சுற்றுப் பயணத்தார் வகுப்புப் பயணம்.

(ஆ) கட்டணங்கள்—சகல கட்டாயக் கட்டணங்களும்.

(இ) சீவன சகாயப்படி—அவுஸ்திரேலியாவுக்குப் போயடையும் திகதி தொடக்கம் வருடாந்தம் $A 2,455—தவணைப் பணமாக இருவாரங்களுக்கொருமுறை கொடுபடும்.

(ஈ) உடுப்புச் சகாயப்படி—அனுமதிக்கப்பட்ட இடங்களில் ஆகக்கூடிய தொகையாக $A124.

(உ) விவாகச் சகாயப்படி—புலமைப் பரிசில் பெறுபவரின் மனைவி அவுஸ்திரேலியாவில் அவருடன் சீவிக்கும்வரை விவாகம் செய்த ஒருவருக்கு வருடாந்தம் $A 580. அவருடைய மனைவி புலமைப் பரிசில் பெற்றுள்ளவிடத்து அல்லது உத்தியோகத்தில் இருக்குமிடத்து இது வழங்கப்படமாட்டாது.

குறிப்பு.—சகாயப்படியாக வழங்கப்படும் $A 580 அவுஸ்திரேலியாவில் மாணவரின் மனைவியின் செலவுக்காகவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாணவருடன் மனைவியும் கூடிச் செல்லின் இதைவிட அவருக்கு வேறு யாதேனும் வரும்படி அவசியப்படும்.

(ஊ) அவுஸ்திரேலியாவுக்குள் விடுமுறைக் காலப் பிரயாணம்—இங்ஙனம் வழங்கப்படும் தொகை $A 100.

(எ) ஏனைய துணைச் சகாயப்படிகள்—மிக அதிகமான விலையுள்ள அவசிய புத்தகங்கள் வாங்குதற்கும் அதிவிசேட வைத்தியச் செலவுகளுக்குமென மேலதிக சகாயப்படிகள் வழங்கப்படலாம். (ஒரு பல்கலைக் கழகத்தில் அல்லது கல்லூரியில் முழுநேரம் கல்வி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கொடைகள் மீது அவுஸ்திரேலியா அரசாங்கம் வரி விதிக்காது).

குறிப்பு.—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. நேர்முகப் பரீட்சை.—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை

தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்விதச் செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், அவுஸ்திரேலியாவுக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்த வரையில் சம்பளங்கள், சகாயப் படிகள் ஆகியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்தியப் பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் அவுஸ்திரேலியாவில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்திய சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால், அரசாங்க உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில், கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார். ஏனையோரைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து திரும்பியதும் அவர்களுக்கு உத்தியோகம் அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கவில்லை.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீள்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவர்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்டபின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருடகாலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. **நியமனங்கள்** முகவாண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டபின் அவைகளை ஏற்றுக்கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துறைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள் 1973.3.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற்பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1973 ம் ஆண்டு மார்ச் மீ 7 ந் உ.

3-642/2—16.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 51

---

எண் : பொ. நி. 14 அ/172.

**கல்வி அமைச்சு**

**பல்தொழில் நுட்ப நிலையங்களில் பொறி முறை எந்திரவியல் விரிவுரையாளர்—II ஆந் தர பதவி**

கல்வி அமைச்சின் கீழுள்ள பல்தொழில் நுட்ப நிலையங்களில் பொறிமுறை எந்திரவியல் விரிவுரையாளர், II ஆந் தர பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, "செயலாளர், கல்வி அமைச்சு (பொது நிர்வாகக் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாகப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பல்தொழில் நுட்ப நிலையங்களில் பொறிமுறை எந்திரவியல் விரிவுரையாளர்—II ஆந் தர பதவி" என அடையாளமிடப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவிகள் நிரந்தரமானவை. தெரிவு செய்யப்படும் அபேசகர்கள் உபகாரச் சம்பள உரித்துடைய பதவிகளை ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் வகிக்காவிடின் அ. சே. சே. நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் நியமனத்தின் போது அரசாங்க சேவையிற் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் உபகாரச் சம்பள உரித்துடைய பதவி ஒன்றினை வகிப்பின் உபகாரச் சம்பள உரித்தை அவர் தொடர்ந்து அனுபவிப்பார். தெரிவு செய்யப்படும் அபேட்சகர், ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாவிடின், முதற்கண் மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார். நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவி ஒன்றினை அரசாங்கத்தின் கீழ் வகிக்கும் ஒருவர் தெரிவு செய்யப்படின் ஒரு வருட காலத்துக்கு அவர் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய, வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

ரூபா 6,720—12 × 360—ரூபா 11,040.

(குறிப்பு—1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத் திட்டம் ரூபா 4,080—12 × 360—8,400 ஆகும்).

குறிப்பு.—(i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழக எந்திரவியல் பட்டதாரிகள் அல்லது விஞ்ஞான முதுமானி அல்லது கலாநிதிப் பட்டம் போன்ற அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் தகைமைகள் பெற்றவர்கள் வருடாந்தம் ரூ. 7,800 ஆகிய திரட்டிய சம்பள ஆரம்பப் படியில் வைக்கப்படுதற்கு உரித்துடையராவர்.

(ii) பல்கலைக் கழக அல்லது சமமான மட்டத்தில் 3 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றுள்ள பட்டதாரிகள், திறைசேரி அனுமதியுடன், வருடாந்தம் ரூ. 7,800 ஆகிய திரட்டிய சம்பள ஆரம்பப்படியில் வைக்கப்படலாம். ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள அபேட்சகர் ஒருவர் தெரிவு செய்யப்படின், அவருடைய

சம்பளம் 26.2.57 ஆந் திகதிய 361 ஆம் இலக்கச் சுற்றுநிருபம் 13.6.59 ஆந் திகதிய 492 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தால் திருத்தி அமைக்கப்பட்டதற்கமையத் தீர்மானிக்கப்படும்.

(iii) லண்டன் குடிசார் எந்திரவியலாளர் கூட்டுறுப்பினர் தகைமை அல்லது மின்னெந்திரவியலாளர் கூட்டுறுப்பினர் தகைமை அல்லது பொறிமுறை எந்திரவியலாளர் கூட்டுறுப்பினர் தகைமை போன்ற பூரண உயர்தொழில் தகைமைகள் பெற்றுள்ள ஓர் அபேட்சகர் வருடாந்தம் ரூ. 9,960 ஆகிய திரட்டிய சம்பளம் பெறுதற்கு உரித்துடையராவர். அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழக எந்திரவியல் பட்டதாரிகளாகவுள்ள II ஆந் தர விரிவுரையாளர்கள், திரட்டிய சம்பள அளவுத் திட்டத்திலான உச்சிப்படியான வருடாந்தம் ரூபா. 11,040 ஐ அடைந்து அச்சம்பளப்படியில் ஒரு வருடம் சேவை புரிந்தபின் ரூ. 480 வருடாந்தச் சம்பள உயர்ச்சிகளுடன் திரட்டிய சம்பள அளவுப்படியான ரூ. 13,440 வரை செல்ல உரித்துடையராவர்.

4. தேவைப்படும் தகைமைகள்.—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகள் பெற்றுள்ளாரெனத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும்.

(அ) சிறந்த ஒழுக்கமும் உடல்நலமும் உடையவராக இருக்க வேண்டும்.

(ஆ) 7.4.1973 அன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசாங்க சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(இ) (i) பொறிமுறை எந்திரவியல் பாடங்களுடன் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழக விஞ்ஞானமாணி (எந்திரவியல்) பட்டம் பெற்றிருக்க வேண்டும்;

அல்லது

(ii) பொறிமுறை எந்திரவியலாளர் நிறுவனத்தின் கூட்டுறுப்பினர் தகைமைப் பரீட்சையின் I ஆம், II ஆம் பகுதிகளில் சித்தி அடைந்திருக்க வேண்டும்;

அல்லது

(iii) சமமான அல்லது உயர்ந்த தகைமைகள் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) சிங்களத்தில் கற்பித்தற்கு ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். அல்லது சிங்களத்தில் கற்பித்தற்கான தேர்ச்சியை நியமன திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் பெற வேண்டும்.

குறிப்பு.—வேண்டிய தகைமைகளைப் பெற்று, கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில் நுட்ப நிலையங்களில் ஏற்கனவே சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுப் பத்திரம் (ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச் சான்றிதழ்கள் இரண்டு; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

குறிப்பு.—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும், அது விதிக்கப்பட்ட திகதிக்கு முன் உரிய திணைக்களத் தலைவரால் பெற்றிருக்கப்பட்டு, தாமதத்துக்குப் போதிய காரணம் காட்டி அதனை ஏற்றுக் கொள்ளுமாறு திணைக்களத் தலைவரால் சிபார்சு செய்யப்பட்டாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. விண்ணப்பங்களேனும் விண்ணப்பங்கள் சம்பந்தமான கடிதங்களேனும் கல்வி அமைச்சின் செயலாளருடைய விலாசத்துக்கே அனுப்பப்பட வேண்டும்; இவ்வமைச்சிலுள்ள எவ்வுத்தியோகத்தரின் பெயருக்கும் இவை அனுப்பப்படலாகா.

8. இவ்வர்த்தமானியின் I ஆம் பகுதி, (IIஅ) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளவையும் அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகிறது.

9. விண்ணப்பங்கள் பெற்றுக் கொண்டமை பற்றி அறிவிக்கப்படும்.

செயலாளர்,
கல்வி அமைச்சு,

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
6.3.1973.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

(8½" × 13½" அளவு அரைத்தாள்களில் தயாரிக்கப்பட வேண்டியது)

கல்வி அமைச்சின் கீழுள்ள பல் தொழில்நுட்பக் கல்வி நிலையங்களில் பொறிமுறை எந்திரவியல் விரிவுரையாளர்—II ஆந் தர பதவி

1. பெயர் (முதலெழுத்துக்களுடன்) திரு/திருமதி/செல்வி : ———.
2. முழுப்பெயர் :———.
3. உத்தியோக முகவரி :———.
4. சொந்த முகவரி :———.
5. (அ) இலங்கையரா ? :———.
   (ஆ) அங்ஙனமாயின், வம்சாவழி காரணமாகவா ? பதிவு காரணமாகவா ? ———.
6. பிறந்த திகதி :— வருடம் :——— மாதம் :——— நாள் : ———.
7. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ளபடி சரியான வயது :— வரு.——— மா : ——— நா :———.
8. தற்போதய பதவி பற்றிய விபரங்கள் :———.

(அ) பதவி :———.
(ஆ) நிரந்தரமா தற்காலிகமா ?:———.
(இ) உபகாரச் சம்பள உரித்துடையதா அற்றதா ?:———.
(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா ?:———.
(உ) திணைக்களம் :———.
(ஊ) நிலையம்/வேலை இடம் :———.
(எ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் :———.
(ஏ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டத்திலான தற்போதய படி :———.

9. கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் (சிங்களத்தில் பெற்றுள்ள தேர்ச்சி/தமிழில் பெற்றுள்ள தராதரப் பத்திர விபரங்கள் உட்பட) :———.

| | பரீட்சை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

10. உயர்தொழில் தகைமைகள் பற்றிய விபரங்கள் :———.

| | தராதரப் பத்திரம் | வழங்கியவர் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |

11. பொதுக் கல்வி கற்ற நிலையங்கள் :————.

| நிலையம் | வகுப்பு | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |

12. உயர்தொழில் கல்வி கற்ற நிலையங்கள் :————.

| நிலையம் | பின்பற்றிய பயிற்சி நெறி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

13. முன்னைய நியமனங்கள் (காலவரன் ஒழுங்கில் சுருக்கமாகக் கொடுபடவேண்டியது :————.

| திணைக்களம் | நிலையம் / வேலை இடம் | பதவி | நிரந்தரமா தற்காலிகமா | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |

14. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டதா? (அங்ஙனமாயின் விபரங்களைக் கொடுக்கவும்) :————.

15. விண்ணப்பதாரி அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டவரா? (அங்ஙனமாயின் விபரங்கள் கொடுக்கவும்) :————.

16. விண்ணப்பதாரி பணமுட்டு அற்றவரா? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு? :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————.

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

3-516—16.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 51

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

1/102/54 (ஜி)

**மொழிபெயர்ப்பாளர் சேவையில் உள்ள மொழிபெயர்ப்பாளர்களை பிரிவு II இலிருந்து (ரூ. 3,864—18×144—ரூபா 6,456) பிரிவு I இற்கு (ரூபா 5,736—6×144—8×180—ரூபா 8,040) பதவியுயர்த்து தற்காய தகைமைப் பரீட்சை—மே 1973**

24.9.69 ஆம் திகதியையும் இலக்கம் 773 ஐயும் கொண்ட திறைசேரிச் சுற்றறிக்கையின் பந்தி 2 (அ) (iv) இன் பிரகாரம் பரீட்சை ஆணையாளரால் 12.5.73 ல் கொழும்பில் ஒரு தகைமைப் பரீட்சை மொழிபெயர்ப்பாளர் சேவையின் பிரிவு II இலிருந்து (ரூபா 3,864—18×144—ரூபா 6,456), பிரிவு I க்கு (ரூபா 5,736—6×144—8×180—ரூபா 8,040) பதவியுயர்த்துவதற்காக நடாத்தப்படும்.

2. **தகவுத்திறன்.**—(எ) இப்பரீட்சை மொழிபெயர்ப்பாளர் சேவையின் பிரிவு II க்குரிய வேதனத் திட்டத்தில், அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதியின் கட்டுப்பாட்டின் கீழுள்ள, பத்தாண்டுச் சேவையை பிரிவு II இல் பூர்த்திசெய்தவர்களாகவும், நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்டவர்களாகவும் உள்ள மொழிபெயர்ப்பாளருக்காக நடத்தப்படும்.

(பீ) அவர்களுடைய சேவைகள் எல்லா வகையிலும் திருப்திகரமானது என்று திணைக்களத் தலைவர்களினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். திருத்திகரமான சேவையெனக் கருதப்படற்குப் பரீட்சார்த்திகள் 1973 மே மாதம் 1 ந் தேதி முடிவடையும் 5 வருட காலத்துள் எல்லா ஐந்து தொடர்ச்சியான சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி ஒரு கிழமை வேதனத்திற்கு மேலான அபராதத்தையுடைய தண்டனைக்கு அல்லது கடைசியாகப் பெற்ற சம்பள உயர்விற்குப் பின் ஒரு கண்டனத்திற்கு ஆளானாலும் அவர் மேற் கூறிய பரீட்சைக்குத் தோற்றத் தகவற்றவராவர்.

3. **விண்ணப்பங்கள்.**—விண்ணப்பங்கள், தாம் கடமையாற்றும் திணைக்களத் தலைவர் மூலமாக 11.4.1973 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ பரீட்சை ஆணையாளரை அடையத்தக்கதாகப் பதிவு அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும். அத்தேதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பரீட்சைக்குரிய மாதிரி விண்ணப்பப் படிவம் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பப் படிவங்கள் விண்ணப்பகாரரால் ஒரு முழுத் தாளின் அரைத்தாளில் (வேறு எந்த அளவினதான தாளிலுமல்ல) தயாரிக்கபடுதல் வேண்டும். அப்படிவத்தின் 1 முதல் 6 வரையுள்ள பக்கங்கள் 1 ஆம் பக்கத்திலும், அத்தாட்சிப்படுத்தலும் திணைக்களத் தலைவரின் சான்றிதழும் 2 ஆம் பக்கத்திலும் இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பக்காரரின் கையாலேயே நிரப்பப்பட வேண்டும்.

திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பப் படிவங்களிலுள்ள சான்றிதாழ்களை கையொப்பமிட வேண்டப்படுவதுடன், கடித உறையின் இடது பக்கமூலையில் பரீட்சையின் பெயர் தெளிவாக எழுதப்படுதலைக் கவனிக்குமாறும் வேண்டப்படுகின்றனர்.

4. **ஆளடையாள அட்டைகள்.**—பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் எடுக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளரின் திருத்திக்கமைய தங்களது அடையாளத்தை நிரூபிக்க வேண்டப்படுவர். இந் நோக்கத்திற்காகப் பின்வரும் சாதனங்களிலொன்று ஏற்றுக் கொள்ளப்படும்.—

(அ) அஞ்சல் அதிபர் நாயகத்தினால் வழங்கப்படும் ஆளடையாள அட்டை.

(ஆ) கடவுச்சீட்டுப் பருமனுடைய ஒளிப்படம் (ஒளிப்படத்தின் மறுபுறத்தில் திணைக்களத்தின் தலைவர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் முன் பரீட்சார்த்தி கையொப்பமிட்டு இக்கையொப்பமும் ஒளிப்படமும் சரியானதென அவ்வுத்தியோகத்தர் சான்றளித்தல் வேண்டும். சான்றளிப்பவரின் பெயர், பதவி, திகதி, முகவரி ஆகியன தெளிவாகத் தெரிவித்தல் வேண்டும். மேற்பார்வையாளர் இவ்வொளிப்படத்தை வைத்திருப்பார்).

(இ) பரீட்சை தொடங்கும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு முற்படாமல் வழங்கப்பட்ட செல்லுபடியான கடவுச்சீட்டு.

(ஈ) ஆட்கள் பதிவு செய்யும் திணைக்களத்தினால் கொடுக்கப்பட்ட அடையாள அட்டை.

5. **பரீட்சைக் கட்டணம்.**—மொழிபெயர்ப்பாளர் சேவையின் பிரிவு I க்கு பதவியுயர்வுக்காக நடாத்தப்பட்ட பரீட்சைக்கு முன்னர் தோன்றிய பரீட்சார்த்திகள் எல்லாரும் பரீட்சைக் கட்டணம் செலுத்துமாறு வேண்டப்படுவர். முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுவோர் பரீட்சைக் கட்டணம் செலுத்தவேண்டியதில்லை. முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ள எல்லாப் பரீட்சார்த்திகளும் விண்ணப்பப் படிவங்களுக்கு 25 ரூபா பெறுமதியான முத்திரைகள் ஒட்டித் தங்கள் கையொப்பமும் திகதியும் இடுவதன்மூலம் பெறுமதி நீக்கம் செய்தல்வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் மூத்

திரைக்கட்டணம் மீளக் கொடுக்கப்படமாட்டா. வேறேதும் பரீட்சைக்கு பரீட்சைக் கட்டணத்தை மாற்றம் செய்வதற்கும் அனுமதியளிக்கப்படமாட்டாது.

6. **பரீட்சைத் திட்டம்.**—இப்பரீட்சை ஒவ்வொன்றும் 3 மணித்தியாலத்திற்கான இரு வினாத்தாள்களைக் கொண்டதாகும். இவ்வினாத் தாள்களின் தரம் கல்விப் பொதுத் தராதரப் பத்திரத் (உயர்நிலை) தரத்திற்கும் பட்டதாரிப் பரீட்சையின் தரத்திற்கும் இடை நிலைப் பட்டதாகவிருக்கும்.

இவ்வினாத்தாள்களுக்குரிய பாடத்திட்டங்களும் புள்ளிகளும் பின்வருமாறு :—

| | புள்ளிகள் |
|---|---|
| I ஆம் வினாத்தாள்.—(i) பொது ஆர்வத்திற்குரிய ஒரு கட்டுரைப் பகுதி, (ii) ஓர் அரசகரும ஆவணத்திலிருந்து அல்லது அறிக்கையிலிருந்து (ஆ) ஒரு செய்தித்தாள் கட்டுரையிலிருந்து அல்லது அறிக்கையிலிருந்து பிரிந்தெடுக்கப்பட்ட பகுதிகள் ஆகியவற்றை சிங்களத்திலிருந்து/தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தல். | 100 |
| II ஆம் வினாத்தாள்.—(i) பொது ஆர்வத்திற்குரிய ஒரு கட்டுரைப் பகுதி, (ii) ஓர் அரசகரும ஆவணத்திலிருந்து அல்லது அறிக்கையிலிருந்து (ஆ) ஒரு செய்தித் தாள் கட்டுரையிலிருந்து அல்லது அறிக்கையிலிருந்து பிரிந்தெடுக்கப்பட்ட பகுதிகள் ஆகியவற்றை ஆங்கிலத்திலிருந்து சிங்களத்தில்/தமிழில் மொழி பெயர்த்தல். | 100 |

பரீட்சார்த்திகள் குறைந்த அளவு 50 சதவிகித புள்ளிகளையாவது ஒவ்வொரு வினாத்தாளிலும் பெற்றாலன்றி சித்திபெற முடியாமலிருக்கும்.

7. பரீட்சார்த்திகள், பரீட்சை ஆணையாளரால் விதித்த பரீட்சை விதிகளுக்குக் கட்டுப்பட்டவராவர். இவ்விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி தண்டிக்கப்படுவர். பரீட்சைக்குரிய விதிகள் இவ்வறிவிப்பின் இறுதியில் வேறாக அச்சிடப்பட்டுள்ளன.

8. **பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விடுதலை.**—பரீட்சை ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்குரிய உத்தியோகத்தர்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக கடமை விடுதலை அளிக்கப்படும். பிரயாணக் கட்டணங்கள் கொடுக்கப்படமாட்டாது.

9. பரீட்சைத் தேதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னர் பரீட்சார்த்தி தமது அனுமதிப் பத்திரத்தைப் பெறாவிடின் அவர் தாம் அனுமதிப்பத்திரத்தைப் பெறவில்லையென்பது உடனடியாகப் பரீட்சை ஆணையாளருக்கு பின்வரும் தகவல்களுடன் அறிவித்தல் வேண்டும்.

**(1) பரீட்சையின் பெயர் ;**
**(2) பரீட்சாத்தியின் முழுப்பெயர் ;**
**(3) முழு அஞ்சல் முகவரி ;**
**(4) அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், விண்ணப்பம் அனுப்பிய திகதி.**

**ஆர். எம். பி. சேனநாயக்க,**
**அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் நாயகத்திற்காக.**

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
**(இணைந்த சேவைகள் பகுதி)**
ரொறிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7.
1973, மார்ச்சு மாதம் 7 ந் திகதி.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**மொழிபெயர்ப்பாளர்களை, மொழிபெயர்ப்பாளர் சேவையின் பிரிவு II இலிருந்து பிரிவு I க்குரிய மொழிபெயர்ப்பாளர் சேவை யுயர்த்தும் தகைமைப் பரீட்சை—மே 1973**

சுட்டிலக்கம்

(அலுவலக உபயோகத்திற்காக)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :————.
 (அச்சு எழுத்துக்களில்)
 முழுப்பெயர் :————.
 (அச்சு எழுத்துக்களில்)
2. முழு அலுவலக முகவரி :————.
3. **நீர் கடமையாற்றும் திணைக்களம் :————.**
4. மொழிபெயர்ப்பாளர் சேவையின் பிரிவு II க்குரிய சம்பள அளவுத் திட்டத்தில் மொழிபெயர்ப்பாளராக முதல் நியமனத் திகதி :————.
5. மொழிபெயர்ப்பாளர் சேவையில் பத்தாண்டுச் சேவை பூர்த்தி செய்த திகதி :————.
6. சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :————.
7. முத்திரைக் கூடு :————.

| ரூபா 25 |
|---|

**குறிப்பு.**—பரீட்சார்த்தி 25 ரூபா பெறுமதியான முத்திரைகளை ஒட்டிப் பின் தமது கையொப்பமும் தேதியும் இடுதல் மூலம் பெறுமதி நீக்கம் செய்தல் வேண்டும். முத்திரைகள் ஒன்றுக்கொன்று மேற்படாமல் ஒட்டவும் (வர்த்தமானி அறிவித்தலின் 5 ம் பந்தியைப் பார்க்க)

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் நான் செய்துள்ள கூற்றுக்கள் யாவும் உண்மையானவையென அத்தாட்சிப் படுத்துகிறேன். இப்பரீட்சைக்குரிய ஒழுங்குவிதிகளுக்கு அமைந்தொழுக நான் உடன்படுகிறேன்.

————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(i) இவ்விண்ணப்பகாரர் மொழிபெயர்ப்பாளர் சேவையின் பிரிவு (II) இற்குரிய சம்பள அளவுத்திட்டத்திற்குரிய (பட்டதாரியல்லாத) மொழிபெயர்ப்பாளராக இத்திணைக்களத்தில் சேவை செய்கிறாரென்றும்,
(ii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்கள் உண்மையானவையென்றும்,
(iii) அவரது வேலையும், நடத்தையும் நெடுக திருப்திகரமாகவிருந்த தென்றும்,
(iv) அவர் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவரென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

கையொப்பம் :————.

கையொப்பமிடும் உத்தியோகத்தரின் பதவிப் பெயர் :—

திணைக்களத் தலைவருக்காக பதவிப் பெயர் :————.

திகதி :————.

**பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்**

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர்.
(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.
(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.
(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.
(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.
(vi) பரீட்சார்த்தியின் நடத்தைபற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

**விதிகள்**

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும்பொழுதும் வெளியேறும்பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனே வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தை தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக்கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர்; செய்கைமுறை அல்லது வாய் மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக் கூடாது. இவ்விதிக்கு மாறாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாக கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறி விடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல விடயங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்குமாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனே செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அழகிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப் பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப் பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோ விட கைப்பை, அழகுசெய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மார்ட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

B 3 අ

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந் நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்பட மாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களிலும் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுது மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக் கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக் கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகளுக்கு

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 வல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன் நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதியைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும் அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்கு தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்திற்குத் தோற்றும்பொழுது இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப் பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனரேகைத் தாள், பேரேட்டுத் தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது, மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும். சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித, உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர் வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(v) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்பரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்கு மிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கிறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்ருேடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vi) உமக்கு கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுப்பக்க அடைப்பில், விஞவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலது பக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவருன இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(vii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப் படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும், பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப் படத்தை அல்லது கோட்டுருபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானுல் அவ்வடிவங்கள் மறுபடியும் கிறப்பட வேண்டும்.

(viii) ஒவ்வொரு படத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல்மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(ix) விஞப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய விஞக்கள் தெரிவுக்குரிய விஞக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(x) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினுல் உமது விடைத்தாள் காணுமற்போய் இப் பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளரிடமோ விடைத் தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xi) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெற வேண்டிஞல் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

போகொட பிரேமறத்ன,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு 2.

3-567—16.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 51

---

பரீட்சைத் திணைக்களம், இலங்கை

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை

**1972 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் நடாத்தப்படும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) ப் பரீட்சைப் பிரமாணங்களின் பகுதி 5 கீழ்க் கண்டவாறு திருத்தப்பட்டுள்ளது.**

" 5 செய்கைமுறைப் பரீட்சைகள் :— ...

கீழ்க்காணப்படும் பாடங்களில் செய்கைமுறைப் பரீட்சைகள் நடாத்தப்படும் :—

(i) இந்துஸ்தானி சங்கீதம்
(ii) கருநாடக சங்கீதம்
(iii) மேல்நாட்டு சங்கீதம்
(iv) மனையியல்
(v) கைவினை-மரவேலை
(vi) கைவினை-நெசவுத் தொழில்
(vii) கைவினை-வனைதற் ருெழில்
(viii) கைவினை-உலோக வேலை

சகல பரீட்சார்த்திகளுக்கும் செய்கைமுறைப் பரீட்சைகள், எழுத்துப் பரீட்சையின் பின்னர் நடாத்தப்படும்.

செய்கைமுறைப் பரீட்சை நடைபெறும் திகதி, நேரம், இடம் ஆகியன அப்பாடத்திற்குரிய பரீட்சகர்களால் பரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்படும்."

போகொட பிரேமரத்ன,
பரீட்சாதிகாரி.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி,
கொழும்பு-2,
1973 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ந் திகதி.

3-569—16.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 51

---

எனது இல. 1/112/5 (ஜி)

உயர்தரத் தட்டெழுத்தாளர் சேவைக்குப் பதவியுயர்வு செய்வதற்குத் தகுதிகாண் பரீட்சை—மே, 1973

1973 மார்ச்சு 2 ந் தேதிய 49 ம் இலக்க இலங்கைக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மேற்கூறிய பரீட்சை சம்பந்தமான அறிவித்தலைக் கவனிக்குமாறு முன்னமையும் பரீட்சார்த்திகள் வேண்டப்படுகின்றனர்.

2. இந்த அறிவித்தலின் மூன்றும் பந்தியின் உபபந்தி (அ) பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது :—

தட்டெழுத்தாளர் சேவையில் 1973, மே 1 ந் திகதி அல்லது அதற்கு முன்னர் நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்டவர்களும் 1.5.1973 இல் 4 வருட சேவையை முடித்தவர்களும் 361 ம் இலக்க திறைசேரிச் சுற்று நிருபத்தின்படி 5 வருட தற்காலிக சேவையின் பின்னர் நிரந்தர சேவையிற் சேர்த்துக் கொள்ளப்பட்டு 2 வருட நிரந்தர சேவையை முடித்தவர்களுமே இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

3. அடையாள அட்டைகள்.—பரீட்சார்த்திகள் தாங்கள் எடுக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும், மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில், பரீட்சை மண்டபத்தில் தங்கள் அடையாளத்தை நிருபிக்குமாறு வேண்டப்படுவர். இந் நோக்கத்திற்காகப் பின்வரும் சாதனங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) அஞ்சல் தலைமையதிபதி வழங்கிய அடையாள அட்டை;

(ஆ) இப்பரீட்சைத் தேதிக்கு முன்னதாக மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத காலத்தில் வழங்கப்பட்டதும் வலிவுள்ளதுமான ஒரு கடவுச் சீட்டு (பாஸ்போட்);

(இ) ஆட்களைப் பதியும் திணைக்களத்திஞல் வழங்கப்பட்ட அடையாள அட்டை;

(ஈ) கடவுச்சீட்டுப் பருமனுடைய ஒளிப்படம் (ஒளிப்படத்தின் மறுபுறத்தில் திணைக்களத்தின் தலைவர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் முன் பரீட்சார்த்தி கையொப்பமிட்டு இக்கையொப்பமும் ஒளிப்படமும் சரியானதென அவ்வுத்தியோகத்தர் சான்றளித்தல் வேண்டும். சான்றளிப்பவரின் பெயர், பதவி, திகதி, முகவரி, ஆகியன தெளிவாகத் தெரிவித்தல் வேண்டும், மேற்பார்வையாளர் இவ்வொளிப்படத்தை வைத்திருப்பார்.)

தமது அனுமதிப் பத்திரத்துடன், மேற்கூறப்பட்ட சாதனங்களிலொன்றில்லாத எப் பரீட்சார்த்தியும் இப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

ஆர். எம். பி. சேனநாயக்க,
அரசாங்க நிருவாகப் பணிப்பாளர்
அதிபதிக்காக.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
ரொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7.
1973.3.5.

3-568—16.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 51

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை

1973 இலும் அதற்குப் பின்பும் பௌதிகம், இரசாயனம், தாவரவியல், விலங்கியல்

1973 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் மேற்படி பரீட்சையின் பௌதிகம், இரசாயனம், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களின் 1 ஆம் வினாத்தாளில் உள்ள ஒவ்வொன்றிலும் பல விடைகள் அடங்கிய வினாக்கள் 100 இலிருந்து 75 க்கு குறைக்கப்பட்டுள்ளது என்று, மேற்படி பரீட்சையின் விஞ்ஞான பாடங்களுக்கு மாணவர்களை தோற்றுவிக்கும் எல்லாப் பாடசாலைத் தலைவர்களும், எல்லா தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இத்தால் அறிவிக்கப்படுகிறார்கள்.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி, கொழும்பு 2,
1973, பெப்ரவரி மாதம் 28 ந் திகதி.

3-541—16.03.73 ந் திகதிய வர்த்தமானி இல: 51

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| மாச்சு .. | 2.3.73 | வெள்ளி .. | 21. 2.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 9.3.73 | வெள்ளி .. | 28. 2.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 16.3.72 | வெள்ளி .. | 7. 3.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 23.3.73 | வெள்ளி .. | 14. 3.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 30.3.73 | வெள்ளி .. | 21. 3.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| ஏப்பிறல் .. | 6.4.73 | வெள்ளி .. | 28. 3.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 11.4.73 | புதன் .. | 4. 4.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 19.4.73 | வியாழன் .. | 11. 4.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 27.4.73 | வெள்ளி .. | 18. 4.73 | புதன் .. | ந.ப. 12.00 |

எல். டப்ளியூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந உ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.